

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், தமது குடும்பத்தினரோடு சந்தித்து தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவர் எஸ்.எஸ். காயத்திரிதேவி சா.சி.சிவசங்கர், மருத்துவர் எஸ்.எஸ்.சிவசரண், எஸ்.எஸ்.சிவசூர்யா உள்ளனர்.



புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள விழுப்புரம் தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி ஆகியோரை சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர். மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி என் முருகன், தயா இளந்திரையன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் , துணை அமைப்பாளர்கள் அன்பு, ராஜவேல், பாலாஜி, கலைவாணன், பிரேம், தேவேந்திரன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், திப்பிராஜபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமையல் கூடம் மற்றும் சமையல் அறை கட்டடத்தினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தனர். உடன் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப.தமிழழகன், பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் பாண்டியன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கூலமேட்டில் நேற்று முன்தினம் (17.01.2025) நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுபிடி வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே,மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) செ.ராஜன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் – துவரவயலில்

# துணை முதல்வர் பிறந்தநாள் - சமத்துவப் பொங்கல் விழா!

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜன. 19-

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் துவரவயல் கிராமத்தில் நடைபெற்ற நம்ம ஊர் திருவிழா என்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஜாதி மத பேதங்களை கடந்து அந்த பகுதி கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஒரே இடத்தில் சமத்துவ பொங்கல் வைத்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அப்போது அங்கு நடைபெற்ற குதிரை ஆட்டம், சிலம்பாட்டம், தீப்பந்த சாகச விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் விமர்சையாக நடைபெற்றது. இதில் 5 வயது சிறுவர் அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் அற்புதமாக சிலம்பம் சுற்றியது பார்வையாளர்களை பரவசப்படுத்தியது,

கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினின் 47 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டுபுதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார் கோவில் ஒன்றியம், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கவுன்சிலர் செல்வம் ஏற்பாட்டில் துவரவயல் கிராமத்தில் திமுக வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி தொடங்கி வைத்தார்.

நம்ம ஊர் திருவிழா என்ற பெயரில் சமத்துவ பொங்கல் விழா மிக விமர்சையாக நடைபெற்றது. இதில் அந்தப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள், மதங்களைக் கடந்தும் ஜாதிகளை மறந்தும் ஒரே இடத்தில் அடுப்புகளை வைத்து பொங்கலிட்டு மகிழ்ச்சியோடு அதை படையலிட்டு சமத்துவ பொங்கல் விழாவை சகோதரத்துவத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த சமத்துவப் பொங்கல் விழாவை முன்னிட்டு அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராமிய கலை நிகழ்வுகள் காண்போரை கவர்ந்தது.

இதனைக் கடந்து அங்கு நடைபெற்ற குதிரை ஆட்டம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் சிலம்பாட்டம் காண்போரைக் கவர்ந்ததோடு ஐந்து வயது சிறுவன் ஒருவன் அற்புதமாக சிலம்பம் சுற்றி அனைவரையும் வியக்க வைத்த நிகழ்வு அங்கிருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இதேபோல் தீப்பந்தம் சுற்றும் விளையாட்டில் அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் தீப்பந்தங்களை சுற்றியதோடு வட்ட வடிவிலான தீக்குள் பாய்ந்து சென்ற காட்சி காண்பபோரை பரவசப் படுத்தியது.

மதியம் 3 மணிக்கு தொடங்கிய இந்த சமத்துவ பொங்கல் விழா இரவு 10 மணி வரை மிகவும் விமர்சியாகவும் உற்சாகத்தோடும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அனைவரும் வியக்கும் வகையில் கொண்டாடப்பட்டது அக்கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இறுதியாக கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே.ஆர்.என். போஸ், கழக மருத்துவரணி துணை செயலாளரும் விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி,

மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் என்.சேட்டு, ஒ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், கே.எஸ். சந்திரன், வெ.முத்து கிருஷ்ணன், மு.பி.ம.சத்தியசீலன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், கீரனூர் நகர செயலாளர் பிஅண்ணாதுரை, டி. செல்வம், எம்.செந்தில்குமார், கை.பழனிச்சாமி,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளரும் பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான முனைவர் சி.குறிஞ்சிவாணன், கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணை தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட பிரதிநிதி பி.சி.என்.கண்ணன்

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வி.என்.எம்.பாலமுருகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.ஜி.ஆர்.மணிவண்ணன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, இலக்கிய அணி ஓ.ஆறுமுகம், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் டி.முரளிதரன், எழில் ராஜா, தமிழினியன் உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்காணக்கான பொது மக்கள் பங்கேற்று சிறப்பித்தனர் மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பொங்கட்டும் உள்ளம்!

**பொ**ங்கல் செழிக்கட்டும்! புத்தமுது உண்டிடுவோம்
எங்கும் திராவிடம் வெல்லட்டும் - பங்கம்
தமிழருக்கு வந்ததால் போராட்டக்களம் காண்போம்
அமிழ்து கண்போம் வெற்றி அறிந்து
பொங்கட்டும் உள்ளம் புதியநற் சிந்தனைகள்
தங்கட்டும் இன்பம் தளைக்கட்டும் - செங்கதிர்
ஆட்சி தளபதியால் ஏழையர் துன்பமகற்றி
மாட்சி பெருகட்டும் மலிந்து.
ஊரெங்கும் கண்ட தொழிற்பூங்கா வெற்றிபெற்று
பார்புகழ் முன்னேற்றம் பெருகியது - நீரூற்றாய்
பொங்கும் வளமையெல்லாம் பூரிப்பால் ஏழையர்
தங்கும் தளபதியின் ஆட்சி.
எல்லார்க்கும் எல்லாம் கிடைத்து மகிழ்வுற்றார்
நல்லவர் ஆட்சி நடப்பதாம் -பொல்லாதார்
தடுத்தாலும் எங்கள் தளபதியின் நல்லாட்சி
எடுப்பாய் இருக்கிறது இங்கு.
பெண்கல்வி பெற்றதால் பெருமை தமிழ்நாட்டிற்கு
எண்ணிலா ஊக்குவித்தார் ஆட்சியாளர்-மண்ணகத்தில்
எல்லாம் பெருமை தளபதிக்கு தந்தாரே
நல்லறம் வந்ததே நாளும்.
எண்ணத் தெளிவால் இயங்கும் உழைப்பினால்
பண்ணால் தமிழ்மொழி பற்றினால் - மண்ணில்
தளபதியார் முந்துகிறார் மற்றவரை! நன்கு
உளமார வாழ்த்துவோம் யாம்.



- கவிஞர்
**நெல்லை குமார சுப்பிரமணியம்**



நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.கலையரசன் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் என்.இளையராஜா, நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர் தி.கலையரசன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், என்.தினேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும்

# முழு வீச்சில் வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம்!

## எஸ்.கே.வேதரத்தினம் -என்.வி காமராஜ் - ராஜாசீனிவாசன் - ஜெகவீரபாண்டியன் பங்கேற்பு!

திருவாரூர்,ஜன19-

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம், மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின்படி நடைபெற்று வருகிறது.

திருவாரூர்,திருத்துறைப்பூண்டி ,மன்னார்குடி ,நன்னிலம் சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பார்வையாளர்களான எஸ்.கே. வேதரத்தினம்,என்.வி.காமராஜ்,ராஜா சீனிவாசன் , ஜெகவீர பாண்டியன் ஆகியோர் கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுடன் பங்கேற்று தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருவாரூர் தொகுதியில் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், புலிவலம் ஏ.தேவா, ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் வாரை. எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி.கே.கலைவேந்தன் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம் உள்ளிட்டோரும்.

மன்னார்குடி தொகுதியில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ,அவைத்தலைவர் க.தன்ராஜ், முன்னாள் ஒன்றிய தலைவர் சோம.செந்தமிழ் செல்வன் நகர்மன்ற தலைவர் மன்னை.த. சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேறி.சிவா, டி.எஸ்.டி. முத்துவேல், கே.வி.கே. ஆனந்த், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர். ராஜசேகர் உள்ளிட்டோரும்.

திருத்துறைப்பூண்டி தொகுதியில் மாவட்ட துணைசெயலாளர் எம். எஸ்.கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப. ஆடலரசன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பல.ஞானவேல், இரா.மனோகரன், ப.பிரகாஷ் நகர் மன்ற தலைவர்கள் கவிதா பாண்டியன் , மும்தாஜ் நவாஸ் கான் உள்ளிட்டோரும்.

நன்னிலம் தொகுதியில் ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், பா.பிரபாகரன், இரா.மனோகரன், கேப்டன் செல்வராஜ், நகர செயலாளர்கள் சிவநேசன் ,ஏ.கே.டி.சேரன் ,பக்கிரிசாமி, பேரளம் தியாகு உள்ளிட்டோரும் கழக முன்னோடிகளும், சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் பங்கேற்று வருகின்றனர்.

### இந்தியாவில் முதல் முறையாக

# சென்னையில் இரவு நேர கார் பந்தயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நடிகர் அஜித் குமார் நன்றி!

துபாய்,ஜன.19-

நடிகர் அஜித் குமார் 'அஜித் குமார் ரேசிங்' (Ajith Kumar Racing) என்ற பெயரில் தமது தலைமையில் ஓர் அணியை உருவாக்கியுள்ளார். இந்த அணி ஜனவரி 12ஆம் தேதி துபாயில் நடைபெற்ற '24H Dubai 2025' சர்வதேச கார் பந்தயத்தில் பங்கேற்று மூன்றாவது இடம் பிடித்து வெற்றி பெற்றது. இது அஜித் ரசிகர்களுக்கிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இந்த வெற்றியை அஜித் குமார் இந்தியக் கொடியுடன் கொண்டாடிய சம்பவம் ரசிகர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்லாது, அவரது மகன், மகள் மற்றும் மனைவி ஷாலினியுடன் அவர் இருந்த வீடியோ காட்சிகள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு அரசுக்கு நன்றி:

இந்த நிலையில், அஜித் குமார் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.



இது குறித்து நேர்காகாணல் ஒன்றிற்கு பேட்டியளித்த அஜித் குமார், **"தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, சென்னையில் முதல் முறையாக கார் பந்தயம் நடைபெற்றுள்ளது. அதுவும் அவை இரவுநேர போட்டியாக நடந்துள்ளது. இத்தகைய கார் பந்தயத்தை நடத்தி சாத்தியப்படுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி.**

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சேலம் மத்திய மாவட்டம் சேலம் வடக்கு ஒன்றியத்தின் சார்பில். மல்லமூப்பம்பட்டி சுந்தர் நகரில். தமிழர் திருநாளை யொட்டி. தலைமைச் செயற்குழு உறுப்பினர். சி. ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் ரெயின்போ நடராஜன் தலைமையில் கழக கொடியேற்றி சமத்துவப் பொங்கல் வைத்து விழா கொண்டாடினர். உடன் கன்னங்குறிச்சி பேரூர் செயலாளர். தமிழரசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தளவாய்ப்பட்டி. ராஜா, மாவட்டப் பிரதிநிதிகள். கண்ணன், விஜயன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர். கார்த்திகேயன், மகளிர் அணி. போதம்மாள்.மீனாட்சி, ஜோதி மற்றும் சீனிவாசன், சுகுமார், மணிகண்டன் ஆகியோர் பங்கேற்றனர்.